
# திராவிடத்தால் வாழ்கிறோம்

827

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

9

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# மக்களாட்சிக்கு அணி திரட்டிய ‘அரசிளங்குமரி’!

‘அரண்மனைவாசிகளை என் அண்ணாவுக்குப் பிடிக்காது?’-‘அரசிளங்குமரி’ திரைப்படத்தில், ஒரு கிராமத்துப் பெண் அரண்மனைவாசியை நோக்கிப் பேசும் வசனம் இது.

1950-1960-களில் நிலவிய நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக, ஜனநாயக வழியில் மக்களை அணிதிரட்டிய தி.மு.க.வின் கொள்கைகளை சரித்திரக் கதைகளின் வழியாகப் புரிய வைத்த படம் ‘அரசிளங்குமரி’.

ஏழை விவசாயிகளுக்கும் ஆளும் அரண்மனை வர்க்கத்தினருக்குமான முரணைப் பேசிய படம் என்பதால், பகுத்தறிவு, பார்ப்பனிய எதிர்ப்பு என்பனவற்றை மட்டுமல்ல, மன்னராட்சி (நிலப்பிரபுத்துவம்) கூடாது, மக்களாட்சியே (குடியரசு) சிறந்தது என்ற கருத்தையும் வசனங்கள் பேசும். மன்னராட்சியை எதிர்த்து, ஃபிரான்சில் எழுந்த பிரெஞ்சுப் புரட்சியின் வரலாற்றிலிருந்து கலைஞர் பெற்ற தாக்கத்திலிருந்து, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கழகக் கோட்பாடுகளையும் பேசியது.

இப்படம் 1961-ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. தயாரிப்பு ஜுபிடர் பிக்சர்ஸ் எம்.சோமசுந்தரம், இயக்கம் ஏ.எஸ்.ஏ.சாமி மற்றும் காசிலிங்கம். கதை, திரைக்கதை, வசனம் கலைஞர். முக்கால்வாசித் திரைப்படத்தில் ஏ.எஸ்.ஏ.சாமி விலகிக் கொண்டதால், காசிலிங்கத்தைக் கொண்டு, மீதிப்படத்தை எடுத்து நிறைவு செய்து வெளியிட்டுள்ளனர். ஏ.எஸ்.ஏ.சாமி, காசிலிங்கம் இருவருமே கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய ஆரம்பகாலத் திரைப்படங்களை இயக்கிய புகழ்பெற்ற இயக்குனர்கள்.

இவர்களில் ஏ.எஸ்.ஏ.சாமிதான் (அருள் சூசை ஆரோக்கிய சாமி - 1915 - 1998) 1947-ஆம் ஆண்டு ஈரோட்டில் தந்தை பெரியார் வீட்டில் தங்கி இருந்து, ‘குடிஅரசு’ ஏட்டின் துணை ஆசிரியராகப் பணிசெய்து கொண்டிருந்த கலைஞரை ‘ராஜகுமாரி’ திரைப்படத்திற்கு வசனம் எழுத வாருங்கள்’ என்று சொல்லி, கோவைக்கு அழைத்தவர். அந்த அழைப்பை ஏற்று, கோவை ஜுபிடர் ஸ்டுடியோவுக்குச் சென்றதைப் பற்றி ‘நெஞ்சுக்கு நீதி’ முதல் பாகத்தில் (பக்கம் - 94) பதிவு செய்துள்ளார் கலைஞர். ‘தம்பி கருணாநிதி என்னை அன்புடன் அண்ணன் என்றும், என் மனைவியை அண்ணி என்றும் அழைப்பார். அவர் ஒரு சிறந்த வசனகர்த்தா...’ என்று ஏ.எஸ்.ஏ.சாமி தன்னிடம் சொன்னதாக தனது ‘நாற்பது திரைப்பட இயக்குனர்களும் நானும்’என்ற நூலில் திரைப்பட வசனகர்த்தா ஆரூர்தாஸூம் குறிப்பிட்டுள்ளார்.

### படத்தின் கதை

அறிவழகன் (எம்.ஜி.ஆர்.) தனது தங்கை அன்புக்கரசிக்கு (பத்மினி) நல்லவிதமாகத் திருமணம் முடித்து வைக்க வேண்டும், தந்தையின் வாளை மீட்டு, குடும்ப மானத்தைக் காக்க வேண்டும் என இரண்டு இலட்சியங்களுடன் வாழ்கிறார். பல ஆண்டுகளுக்கு முன்பு அறிவழகனின் தந்தையும் விவசாயிகளின் தலைவருமான குலசேகரன், கொற்றவன் கோட்டை வீர நாயகத்துடன் வாள் சண்டையிட்டு தோற்றுப் போனதால், அவமானம் தாளாமல் குறுவாளால் தன்னைத்தானே குத்திக்கொண்டு இறந்து போகிறான். குலசேகரனின் வாள் வீரநாயகத்திடம் இருக்கிறது. அந்த வாளை, தான் மீட்க வேண்டுமென்று அறிவழகன் கருதுகிறான்.

இந்நிலையில், ஒருநாள் வயலைக் காவல் காக்கும் அன்புக்கரசி வெற்றிவேலனைச் (எம்.என்.நம்பியாரைச்) சந்திக்கிறாள். அன்புக்கரசிக்கு அரண்மனைவாசி களைப் பிடிக்காது என்பதைத் தெரிந்து கொள்ளும் வெற்றிவேலன், தான் முல்லை நாட்டுத்தளபதி என்பதை மறைத்து, தன்னை சாதாரண சிப்பாய் என்றும், பெயர் வேலப்பன் என்றும் பொய் சொல்லி அன்புக்கரசி யின் காதலைப் பெற்று, பிறகு அறிவழகனின் சம்மதத்துடன் திருமணமும் செய்து கொள்கிறான். தங்கையின் திருமணம் நல்லபடியாக முடிந்துவிட்டது என்கிற நினைப்பில், தனது தந்தையின் வாளை மீட்க, அறிவழகன் புறப்பட்டுப் போகிறான்.

இதற்கிடையே முல்லை நாட்டு அரசருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு சாவதற்கு முன், தனது மகள் அழகு ராணியையும் (ராஜசுலோசனா), அண்டை நாட்டு அரசனான தனது நண்பன் மணிமாற பூபதியையும் (எஸ்.ஏ.அசோகன்) அழைத்து, இருவரிடமும் ஆளுக்கொரு ஓலையைக் (கடிதம்) கொடுத்து, இதுவே தனது மரண சாசனம், இதன்படி நடந்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு இறந்து போகிறான். ஆனால், நாட்டின் தளபதி வெற்றிவேலன் (எம்.என்.நம்பியார்) எப்படியும் மன்னரின் அந்தக் கடிதங்களைக் கைப்பற்றி, தானே முல்லை நாட்டு அரசனாகிவிட வேண்டும் எனத் திட்டம் போடுகிறான்.

தனது படைவீரர்களை அனுப்பி, மணிமாற பூபதியை வழியில் மறித்துக் கடிதத்தைக் கைப்பற்ற முற்படும்போது அறிவழகன் அங்கு வந்து வீரர்களைத் தாக்கி, மணிமாற பூபதியைக் காப்பாற்றுகிறான். அதன் மூலம் அவனது நட்பைப் பெறுகிறான். மணிமாற பூபதி தனது முத்திரை மோதிரத்தை அறிவழகனுக்கு வழங்குகிறான். இதனால், அறிவழகனுக்கும் இளவரசி அழகுராணிக்கும் இடையே நட்பு ஏற்பட்டு அது காதலாக மாறுகிறது.

அதேசமயம், கருவுற்ற தன்னை விட்டுவிட்டு ஊருக்குப்போன கணவன் திரும்பி வராததால், அன்புக்கரசியும் அவளது தாய்மாமனும் வேலப்பனைத் தேடி முல்லை நாட்டு அரண்மனைக்கு வருகின்றனர். அங்கு தனது கணவன் சிப்பாயாக இல்லாது தளபதி வெற்றிவேலனாக இருப்பது கண்டு அதிர்ச்சியடைகிறாள். வெற்றிவேலன் மீண்டும் அவளை ஏமாற்றி சாரட் வண்டியில் ஏற்றி, தனது வீரர்கள் மூலம் காட்டில் விட்டு வரச் செய்கிறான். அங்கிருந்து அவளைச் சலவைத் தொழிலாளியான டி.ஏ.மதுரம் காப்பற்றிப் பராமரிக்கிறார். அன்புக்கரசிக்கு ஆண் குழந்தை பிறக்கிறது.

இதே நேரம் முல்லை நாட்டு அரண்மனையில் இளவரசி அழகுராணியிடம் முறைதவறி நடக்க முற்படும் வெற்றிவேலனை, அறிவழகன் தடுத்து நிறுத்துவதுடன் தன் தங்கைக்குத் துரோகம் செய்த காரணத்திற்காக வெற்றிவேலனுடன் சண்டையுமிடுகிறான். ஆனால், அறிவழகன் முறையான வாள்பயிற்சி இல்லாத விவசாயி என்பதால், வெற்றி வேலனுடன் வாள் சண்டையிட முடியாமல் போகிறது. அதனால் மணிமாற பூபதியிடம் சென்று உதவிகேட்டு அவனது வழி காட்டலில் வெற்றிவேலனின் தந்தையான கொற்றவன் கோட்டை வீரநாயகத்தின் (ஆர்.நாகேந்திர ராவ்) இருப்பிடத்திற்கு மாறுவேடத்தில் செல்லும் அறிவழகன் வீரநாயகத்திடம் வாள்பயிற்சி பெற்று, அவரிடம் இருந்த தனது தந்தையின் வாளையும் மீட்டு வருகிறான்.

சந்தர்ப்ப சூழ்நிலையால் யார் என்று தெரியாமல், தனது மாமனார் வீரநாயகத்திடமே கைக்குழந்தையுடன் அன்புக்கரசி தஞ்சமடைகிறாள். ஒரு கட்டத்தில் அவர்தான் தனது மாமனார் என்றும் தெரியவருகிறது. இறுதியில், அறிவழகன் தனது தங்கையைக் கைவிட்ட வெற்றிவேலனைப் பழிவாங்க அவனுடன் சண்டையிடுகிறான். அன்புக்கரசி இருவருக்கு மிடையே புகுந்து சண்டையைத் தடுக்க முற்படுகிறாள். தனது மாமனாரிடமும் சண்டையைத் தடுத்து நிறுத்தும்படி மன்றாடுகிறாள். இருவருக்கும் குறுக்கே வரும் வீர நாயகம் தனது மகன் வெற்றிவேலனுடைய வாளால் குத்துப்படுகிறார். சாகும் தறுவாயில், மகனிடம் அன்புக்கரசியையும் குழந்தையையும் ஏற்றுக்கொண்டு வாழ அறிவுரை சொல்லிவிட்டு இறந்து போகிறார்.

மனம் திருந்தும் வெற்றிவேலன் அன்புக்கரசியுடனும் குழந்தையுடனும் சேர்கிறான். அறிவழகனும் அரசிளங்குமரி அழகுராணியும் இணைகின்றனர். மன்னராட்சி முடிந்து, மக்களாட்சி மலர்ந்ததாக அறிவிக்கப்படுவதுடன் படம் முடிகிறது.

கலைஞரின் கதை வசனத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக ‘அரசிளங்குமரி’ திரைப்படத்தில் கொள்கைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ‘ஏற்றமுன்னா ஏற்றம்’, ‘சின்னப்பயலே சின்னப்பயலே சேதி கேளடா’ ஆகிய பாடல்களை ஜி.இராமநாதன் இசையில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதினார். ஆக மொத்தம் ‘அரசிளங்குமரி’ உண்மையில் குடியரசுக் குமரியாகவே கலைஞரால் படைக்கப்பட்ட அழியாத காவியம்.








> **‘அரசிளங்குமரி’ உண்மையில் குடியரசுக் குமரியாகவே கலைஞரால் படைக்கப்பட்ட அழியாத காவியம்.**

...காட்சி விரியும்

## திராவிட இலக்கியம் மற்றும் இதழியல் படிக்க வாய்ப்பு!



சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் சார்பில், ‘திராவிட இலக்கியம் மற்றும் இதழியல்’ ஓராண்டு பகுதிநேர முதுநிலைப் பட்டயப் படிப்புக்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. 2025-26 கல்வியாண்டில் இப்படிப்பில் சேர விரும்புவோர் 31.05.2025-க்குள் இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப அச்சுப்படி 10.06.2025-க்குள் அனுப்பபட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடத்திட்டமாக முதற் பருவத்தில், ‘திராவிட இயக்க வரலாறு’, ‘திராவிட இலக்கியம்’, ‘திராவிட இதழியல்’, ‘உலக தத்துவ மரபில் திராவிடவியல்’, ‘திராவிடவியலும் சமூக வளர்ச்சியும்’ ஆகியவை இடம்பெற்றுள்ளன. இரண்டாம் பருவத்தில் ‘திராவிட இலக்கிய அழகியல்’, ‘திராவிட இதழ்களின் நடையியல்’, ‘திராவிடக் கலை ஊடகங்கள்’, ‘திராவிடத் தத்துவவியல்’, ‘திராவிடவியல் ஆய்வுகள்’ ஆகியவை இடம்பெற்றுள்ளன.

‘இளநிலை தமிழிலக்கியம்’, ‘இளநிலை இதழியல்’ மற்றும் ‘மக்கள் தொடர்பியல்’ ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது முதுநிலை ‘தமிழிலக்கியம்’, முதுநிலை ‘இதழியல்’ மற்றும் ‘மக்கள் தொடர்பியல்’ ஆகிய துறைகளில் படித்துக்கொண்டிருப்பவர்கள் இப்படிப்பில் சேர விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பக் கட்டணம்: ரூ.118

ஆண்டு கல்விக் கட்டணம்: ரூ.5,910

மேலும் தொடர்புக்கு: 94442-04387, 80121-93831

## ஃப்ளாஷ்பேக்



### முத்தமிழறிஞர் ஆய்வு நூலுக்கு நீதிமன்ற ஆணை!



பேராசிரியர் பெரிய.கந்தன் (எ) கலைஞர்தாசன்

‘கலைஞர் அவர்களின் இலக்கியப் பணிகள்’ என்ற தலைப்பில், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு, அதனைப் புத்தகமாக 2016-ஆம் ஆண்டு அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் வெளியிட முயற்சி செய்தேன். அ.தி.மு.க அரசு அனுமதி மறுத்த நிலையில், சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்து அனுமதி பெற்றேன்.

இந்தச் செய்தியை அறிந்த முத்தமிழறிஞர் கலைஞர் என்னை நேரில் அழைத்தும், நீதிமன்றம் வழங்கிய ஆணையைப் படித்துப் பார்த்தும் மனதாரப் பாராட்டினார். அவரின் கரங்களால் ‘கலைஞர் தாசன்’ என்ற புனைப்பெயரை பொறித்துத் தந்து அருகில் அழைத்துப் பொன்னாடை போர்த்தி, கௌரவித்த போது கண்ணீர் ததும்பியது.

**– பேராசிரியர் பெரிய.கந்தன் (எ) கலைஞர்தாசன், திருச்சிராப்பள்ளி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சொந்த ஒலிபெருக்கி!

1950-ஆம் ஆண்டு, அக்டோபர் 10-ஆம் தேதி, சென்னை, ஒற்றைவாடை அரங்கில், நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி, அண்ணாவின் ‘ஓர் இரவு’ நாடகத்தை நடத்தினார். அந்த நாடகத்தின் மூலம் திரட்டிய தொகையான 3,139 ரூபாயை, சென்னை நகர தி.மு.க.வுக்குச் சொந்தமாக ஒலிபெருக்கி வாங்குவதற்கு அளித்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131